# රාජ්‍ය මුදල් දෙපාර්තමේන්තුව
# அரச நிதித் திணைக்களம்
# DEPARTMENT OF PUBLIC FINANCE

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General — Tel. 94-11-24 / Fax. 94-11-24

කාර්යාලය / அலுவலகம் / Office — Tel. 94-11-24 / Fax. 94-11-2

මහා භාණ්ඩාගාරය, මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය, කොළඹ-01, ශ්‍රී ලංකාව.
பொதுத் திறைசேரி, நிதி திட்டமிடல் அமைச்சு, கொழும்பு-01, இலங்கை.
General Treasury, Ministry of Finance and Planning, Colombo-01, Sri Lanka.

Website: www.pfd.gov.lk

E-mail: pubfin@pfd.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல / My No — PFD/RED/CIR/2016/02

ඔබේ අංකය / உமது இல / Your No —

දිනය / திகதி / Date — 2016.02.18

**அரச நிதி கடித இல: 03**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள்
அரசாங்க கூட்டுத்தாபனங்களினதும், நியதிச்சட்ட சபைகளினதும்,
அரசாங்க உடைமையாக்கப்பட்ட கம்பனிகளினதும் தலைவர்கள்
உள்ளூராட்சி அதிகார சபைகளின் தலைவர்கள்
கருத்திட்டப் பணிப்பாளர்கள் மற்றும்
மத்தியவங்கியின் ஆளுநர் அனைவருக்கும்

**<u>வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் சேவைக் கூட்டுத்தாபனத்திற்கான இறக்குமதிக் கற்பற் சரக்குப் பொருட்களுக்கான ஒதுக்கீடு</u>**

மேற்படி விடயம் தொடர்பிலான 2005.05.06 ஆம் திகதியிடப்பட்டதும் 415 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரச நிதிச் சுற்றறிக்கைக்கு தங்களுடைய கவனம் கோரப்படுகின்றது.

1. பொருட்களின் இறக்குமதி தொடர்பில் 2005.05.06 ஆம் திகதியிடப்பட்டதும் 415 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரச நிதிச் சுற்றறிக்கையைக் கடைப்பிடிப்பதற்கு 2016.01.13 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவை தீர்மானித்துள்ளது. எனவே வெளிநாடுகளிலிருந்து கப்பற் சரக்குப் பொருட்களை இறக்குமதி செய்யும் வெளிநாட்டு நியதிக் கருத்திட்டங்களையும் அரசாங்க உடைமையாக்கப்பட்ட கம்பனிகளையும் உள்ளடக்கி அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் போன்ற சகல அரச முகவர் நிலையங்களும் அவற்றின் கப்பல் மூலமாகச் செய்யப்படும் இறக்குமதிகளை மேற்படி அரசாங்க நிதிச் சுற்றறிக்கையினால் செய்யப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளை பின்பற்றுவதன் மூலம் செய்வது ஓர் கட்டாயத் தேவைப்பாடாகவுள்ளது.

2. 2005.05.06 ஆம் திகதியிடப்பட்டதும் 415 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரச நிதிச் சுற்றறிக்கையின் 07ஆம் பந்தியின் பிரகாரம் பொருட்களின் கப்பல் மூலமான இறக்குமதியைச் செய்தல் தொடர்பில் 2005.05.06 ஆம் திகதியிடப்பட்ட அரச நிதிச் சுற்றறிக்கையிலும் இயைபுள்ள ஏனைய சுற்றறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துமாறு சகல வர்த்தக வங்கிகளுக்கும் அவற்றின் கவனத்தை கண்டிப்பாகக் கோருவதன் பொருட்டு புதிய அறிவுறுத்துரைகளை வெளியிடுமாறு இத்தால் மத்திய வங்கியின் ஆளுநருக்கு கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

பீ. அல்கம
அரச நிதிப் பணிப்பாளர் நாயகம்

பிரதி: கணக்காய்வாளர் நாயகம்